**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**வெற்றிடங்கள்**

இங்கு கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பதவி : துறைமுக பாதுகாப்புக் காவலர் (ஆண்)**

**(அ) சம்பளம்:**

சம்பள வகையீடு : 10:3 (SS 3)

அடிப்படைச் சம்பளம் : ரூ. 35,845/=

வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 365/=

(மாதாந்த மொத்த சம்பளம் ரூ. 111,000/= அளவினதாக இருக்கும்)

**(ஆ) தகுதித்திறன் :**

கல்வி பொது தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் கணிதம், மொழி உட்பட்டதாக ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**(இ) ஏனைய கட்டாய தேவைப்பாடுகள் :**

i. உயரம் 05 அடி 04 அங்குலம் ஆக இருத்தல் வேண்டும்.
ii. மார்பு 32 அங்குலம் (மூச்சுப் பிடித்து) இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த தேகாரோக்கியத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**(ஈ) வயதெல்லை :**

18 – 35 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**குறிப்பு :**

i. க.பொ.த (உ.த) சித்தியடைந்த மற்றும் விளையாட்டு வெற்றிகளை பெற்றுள்ளவர்கள் மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.
ii. பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் பாதுகாப்புச் சேவையில் பத்து(10) வருடங்கள் முடிவடையும் வரை பாதுகாப்புச் சேவை தவிர்ந்த வேறு எந்தவொரு பதவி தொடர்பிலும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டார்கள்.
iii. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய நேர்முக மற்றும் / அல்லது செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
iv. நேர்முக பரீட்சைக் குழுவின் தீர்மானத்தின் படி அல்லது பதவிக்கு அவசியமாயின் மருத்துவப் பரிசோதனையொன்றிலும் சித்தியடைதல் வேண்டும்.

**கவனிக்க :**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்டதிட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப அதிகாரசபையின் எந்தவொரு பகுதியில் / பிரிவில் அல்லது நாட்டின் எந்தவொரு பகுதியில் சேவை புரிய உட்படுத்தப்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் ‘‘பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13’’ என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2024.07.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“துறைமுக பாதுகாப்புக் காவலர் (ஆண்) பதவிக்கு”** என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் திணைக்களம் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**